# தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்
# &
## இந்தியவானிலைத்துறை
## வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை
## ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (10.09.2022 முதல் 14.09.2022 )

**அறிக்கை எண் 072/2022** **தேதி.09.09.2022**

### மாநிலத்தின் கடந்தவார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 365°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 28°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 18°செ முதல் 20°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் பரவலாக மழை பெறப்பட்டது.

### ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்தவார வானிலை (06.09.2022 முதல் 08.09.2022) | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 14.09.2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 06/09 | 7/09 | 08/09 | தேதி | நாள்-1 10/09 | நாள்-2 11/09 | நாள்-3 12/09 | நாள்-4 13/09 | நாள்-5 14/09 |
| 12.3 | 2.5 | 1.1 | மழை (மி.மீ) | 12 | 10 | 6 | 6 | 6 |
| 33 | 30 | 30 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 32 | 32 | 33 | 33 | 33 |
| 24 | 23 | 22 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 23 | 23 | 23 | 23 | 23 |
| 6 | 7 | 7 | மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 6 | 5 | 4 | 4 |
| 76 | 87 | 86 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 75 | 75 | 75 | 75 | 75 |
| 79 | 75 | 78 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 55 | 55 | 55 | 55 | 55 |
| 14 | 15 | 17 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 8 | 8 | 8 | 8 | 8 |
| 230 | 230 | 250 | காற்றுவீசும் திசை | 270 | 270 | 270 | 270 | 270 |

### எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (10.09.2022 முதல் 14.09.2022)

வரும் நாட்களில் வானம் பெரும்பாலான மேக மூட்டத்துடன் காணப்படும். அடுத்து வரும் ஐந்து நாட்களுக்கு இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32°செ முதல் 33°செ ஆகவும், குறைந்த பட்ச வெப்பநிலை 23°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 75 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 55 சதவிகிதமாகவும் பதிவாக

வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை வீசக்கூடும்.

| ஈரோடு மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அம்மாபேட் | அந்தியூர் | பவானி | பவானிசாகர் | சென்னிமலை | ஈரோடு | கோபி | கொடுமுடி | மொடக்குறிச்சி | நம்பியூர் | பெருந்துறை | சத்தியமங்கலம் | தாளவாடி | டி.என்.பாளையம் |
| 10-09-2022 | 18 | 21 | 21 | 23 | 29 | 21 | 27 | 16 | 21 | 35 | 26 | 26 | 20 | 26 |
| 11-09-2022 | 13 | 15 | 13 | 18 | 22 | 12 | 20 | 13 | 13 | 28 | 17 | 26 | 12 | 20 |
| 12-09-2022 | 9 | 10 | 10 | 11 | 13 | 10 | 12 | 7 | 10 | 15 | 12 | 12 | 10 | 12 |
| 13-09-2022 | 0 | 0 | 0 | 1 | 1 | 0 | 1 | 0 | 0 | 3 | 0 | 1 | 0 | 1 |
| 14-09-2022 | 1 | 2 | 3 | 2 | 3 | 3 | 3 | 1 | 3 | 3 | 3 | 2 | 3 | 2 |

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| **பொது அறிவுரை** | | அடுத்த 5 நாட்களுக்கு மிதமான மழையுடன் காற்றின் வேகம் 8 கி.மீ வரை எதிர் பார்க்கப்படுபிறது. பயிர்களுக்கு நீர்பாசனம் செய்வதனை ஒத்திவைக்க வேண்டும். உயரமான பயிர்களுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு போதிய பாதுகாப்பு செய்யவேண்டும்.<br>கடந்த வார மற்றும் எதிர்பார்க்கப்படும் மழையினைப் பயன்படுத்தி மானாவாரி கரிசல் நிலங்களை முன்பருவ விதைப்பிற்கு தயார் படுத்தவும். |
| நெல் | வளர் மற்றும் பூக்கும் பருவம் | பூக்கும் பருவத்தை அடைந்த குறுவை நெல் பயிருக்கு ஒரு ஏக்கருக்கு 30 கிலோ யூரியா மற்றும் 10 கிலோ மியூரேட் பொட்டாஷ் உரத்தை மேலுரமாக இடவேண்டும். மேலுரம் இடப்பட்ட வயலில் நீர் வடிக்க வேண்டாம்.<br>எதிர்பார்க்கப்படும் மழையினைப் பயன்படுத்தி சம்பா நடவிற்கு நாற்றாங்கால் தயார் செய்யவும்.<br>மழை பெற வாய்ப்புள்ளதால் கார் பருவத்தில் நடவு செய்த நெற்பயிர்கள் பால் பிடிக்கும் தருணம் முதல் அறுவடை தருணத்தில் உள்ளதால், தகுந்த வடிகால் வசதி செய்யவும். |
| பருத்தி | விதைப்பு | மண் ஈரப்பதத்தினை பயன்படுத்தி இறவையில் நடப்பட்ட குளிர் கால கம்போடியா பருத்தி அதிகப்படியான பயிர்களை களைந்து பயிர் எண்ணிக்கையை பராமரிக்கவும். |
| மஞ்சள் | விதைப்பு மற்றும் வளர் | மழை எதிர்பார்க்கப்டுவதால் மஞ்சளில் தக்க வடிகால் வசதி |

| | | |
|---|---|---|
| | பருவம் | ஏற்படுத்த வேண்டும். மேலும் மண்ணின் அதிக ஈரப்பதம் மற்றும் மேக மூட்டத்தின் காரணமாக மஞ்சளில் கிழங்கு அழுகல் நோய் வரவாய்ப்புள்ளதால் 1 சத போர்டாக்ஸ் கரைசல் (அ) 0.25 சத காப்பர் ஆக்ஸி குளோரைடு கரைசலை தூரில் ஊற்றுவதன் மூலம் நோய் பரவாமல் தடுக்கலாம். |

| | | |
|---|---|---|
| கரும்பு | | காற்றின் வேகம் அதிகமாக எதிர்பார்க்கப்படுவதால் முன்பட்ட மற்றும் நடுபட்டங்களில் பயிரிடப்பட்ட கரும்பிற்கு தோகை உரித்து விட்டம் கட்ட வேண்டும். |
| வாழை | | மழையுடன் காற்றின் வேகம் மணிக்கு 8 கிமீ விட அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதத்திற்கு மேல் வயதுடைய வாழைக்கு ஊன்று கொடுக்க வேண்டும். மேலும் தண்ணீர் பாய்ச்சுவதை தவிர்க்க வேண்டும். |
| கால்நடைகள் | | மாடுகளை குளக்கரைகளில் புதிதாக முளைத்த தாவரங்களை மேய்சலுக்கு விட வேண்டாம். இதனால் வரக்கூடிய துள்ளுமாறி நோயைத் தவிர்க்கலாம்.<br>நிலவும் பருவகால வானிலை கோமாரி நோய் (கால் மற்றும் வாய்ச்சப்பை நோய் ) தாக்குதலுக்கு ஏற்றதாக காணப்படுவதால் அருகில் உள்ள கால்நடை மருத்துவமனையில் கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டுக் கொள்ளுமாறு அறிவுருத்தப்படுகிறார்கள். |

**குறுஞ்செய்தி**

- மழையுடன் காற்றின் வேகம் மணிக்கு 8 கிமீ விட அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதத்திற்கு மேல் வயதுடைய வாழைக்கு ஊன்று கொடுக்க வேண்டும். மேலும் தண்ணீர் பாய்ச்சுவதை தவிர்க்க வேண்டும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**